பக்கங்கள்: ஆறு
Registered as a Newspaper

உதயன்

விலை
ரூபா
5-00

சுடர்: 7 திருவள்ளுவர் ஆண்டு 2023 புரட்டாதி 28 புதன்கிழமை (14-10-1992) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர் 321

கடலில் கொட்டப்பட்ட ஆயுதங்கள்

அரசு ரகசியமாக வாங்கியவையே!

ஒரு பகுதியை இராணுவம் முன்னர் பயன்படுத்தியிருந்ததாகத் தகவல்

கொழும்பு, அக்டோபர் 14

கடந்த மாதம் தொடக்கம் காலிப் பகுதி ஆழ்கடலில் கொட்டப்பட்டு வரும் ஆயுதங்கள் மற்றும் வெடிமருந்துகள ஸ்ரீலங்கா அரசாங்கத்தினால் இரகசியமாகக் கொள்வனவு செய்யப்பட்டவை என்று தெரியவந்துள்ளது.

காலியில் களஞ்சியப்படுத்தி வைக்கப்பட்டிருந்த இந்த ஆயுதங்களில் ஒரு பகுதி வடக்கு — கிழக்கு யுத்தத்தில் பயன்படுத்தப்பட்டன என்றும் கொழும்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

கடலில் கொட்டப்பட்டு வரும் ஆயுதங்கள், வெடிமருந்துப் பொருள்கள் பெல்ஜியம் ஆயுத விற்பனை முகவர் ஒருவருக்குச் சொந்தமானவை என்றும்—

அவர் இந்த ஆயுதங்களை இலங்கையில் களஞ்சியப்படுத்தி வைப்பதற்கு இலங்கை அரசுடன் உடன்பாடு ஒன்றைச் செய்திருந்தார் என்றும்—

எனினும் உடன்படிக்கைப்படி உரிய காலம் முடிந்தும், அவர் ஆயுதங்களை அகற்றாததாலும் அவை பாவனைக்கு உதவாததாலும் கடலில் கொட்டப்படுவதாகவும் அரச தரப்பில் முன்னர் கூறப்பட்டது.

[6 ஆம் பக்கம் பார்க்க]

இரண்டு மாதங்களில் 1,250 படையினர் ஓட்டம்!

கொழும்பு, அக். 14

1992 ஆகஸ்ட் 8 ஆம் திகதியின் பின்னர் — கடந்த இரண்டு மாத காலத்தில் — இராணுவத்திலிருந்து சுமார் ஆயிரத்து 250 பேர் ஓடிவிட்டனர்.

இராணுவத்தின் நிரந்தரப் படையிலிருந்து 875 பேரும் துணைப் படையைச் சேர்ந்த 373 பேரும் படையை விட்டு விலகி ஓடியிருப்பதாக ''ராவய'' பத்திரிகை செய்தியில் தெரிவிக்கப்படுகிறது.

இளவாலையில் சிக்குண்ட ஐவர் வந்து சேர்ந்தனர்

அவர்களில் 4 பேர் ஆஸ்பத்திரியில்

யாழ்ப்பாணம், அக். 14

இளவாலை, அளவெட்டிப் பகுதிகளில் இராணுவத்தினரின் பிடிக்குள் சிக்கியிருந்த ஐவர் நேற்று அங்கிருந்து விடுவிக்கப்பட்டு யாழ்ப்பாணம் வந்து சேர்ந்தனர்.

செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழுவின் பிரதிநிதிகள் கப்பலில் பருத்தித்துறை ஊடாக அவர்களைக் கூட்டி வந்தனர்.

அழைத்து வரப்பட்ட ஐவரில் நான்கு பேர் யாழ்; ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டனர்.

அவர்களில் மூவர் இளவாலையைச் சேர்ந்தவர்கள் ஆவர். அவர்களின் விவரம் வருமாறு:-

படையினரின் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகிக் காயமுற்ற திருமதி இராசமணி மரியதாஸ் [வயது 46], ஜீவரட்ணம் விஜயசிங்கம் [வயது

(5 ஆம் பக்கம் பார்க்க)

அளவெட்டி, இளவாலையில்

ராணுவ பிடியில் அகப்பட்ட மேலும் 100 பேர் வருவர்

யாழ்ப்பாணம், அக்: 14

"இளவாலை, அளவெட்டிப் பகுதியில் படையினரிடம் சிக்குண்டோரில் — உறவினர்களைப் பிரிந்திருக்கும் நூறுக்கும் அதிகமானோரை அவர்களது உறவினர்களுடன் சேர்க்க ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன. இளவாலை பங்குத் தந்தையின் தலைமையில் அங்கு அமைக்கப்பட்டுள்ள குழு ஒன்று இதற்கான முயற்சிகளை மேற்கொண்டுள்ளது''.

— இளவாலையிலிருந்து நேற்று யாழ்ப்பாணம் வந்து சேர்ந்த ஜீவரெட்ணம் விஜயசிங்கம் (55 வயது) என்பவர் மேற்கண்ட தகவலை வெளியிட்டார்.

அவர் மேலும் கூறியதாவது:-

இளவாலை, அளவெட்டிப்

(5 ஆம் பக்கம் பார்க்க)

திருமலையில் படையினர் ரோந்து புலிகளின் அதிரடிகளால் குறைப்பு

யாழ்ப்பாணம், அக். 14

திருகோணமலை மாவட்டத்தில் விடுதலைப் புலிகளின் அதிரடித் தாக்குதல்கள் தீவிரமடைந்துள்ளதை அடுத்து படையினரின் ரோந்து நடவடிக்கைகள் மட்டுப்படுத்தப்பட்டுள்ளன.

விடுதலைப் புலிகளின் திருகோணமலை மாவட்டத் தளபதி திரு. வசந்தன் இத்தகவலைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:-

விடுதலைப் புலிகளின் அதிரடிகளால் — அச்சம்கொண்ட படையினர் புதிய முகாம்களையும், காவலரண்களையும் அமைத்து வருகின்றனர்.

திருகோணமலை — மணலாறு மாவட்டங்களுக்கு இடையில் இரு முகாம்களைப் படையினர் புதிதாக அமைத்துள்ளனர்.

தென்னமரவாடிச் சந்தியிலும்,-புல்மோட்டை-மதவாச்சி வீதியில் 13 ஆம் கட்டையிலுமே இந்த முகாம்கள் அமைக்கப்பட்டுள்ளன;

மதவாச்சி — புல்மோட்டை வீதியில் மேலும் பல முகாம்களைப் படையினர் அமைக்க முயன்றுள்ளனர்.— என்றார் அவர்; [உ-3]

சிங்களவர் தமது பிள்ளைகளை படையில் சேர்க்க விரும்பவில்லை

காமினி ஜெயசூரியா கவலை

கொழும்பு, அக்: 14

சிங்களப் பெற்றோர் தமது பிள்ளைகள் இராணுவத்தில் சேருவதை விரும்புகிறார்கள் இல்லை;

இராணுவத்தில் சேரவேண்டாம் என்று தமது பிள்ளைகளை அவர்கள் அறிவுறுத்துகின்றார்கள் என்று தெரிய வந்துள்ளது.

சிங்கள பாதுகாப்புச் சங்கத்தின் தலைவரும் முன்னாள் அமைச்சருமான காமினி ஜெயசூரியா ''சண்டே ரைம்ஸ்'' இதழுக்கு அளித்த பேட்டியில் இவ்வாறு கவலை தெரிவித்தார்.

வடக்கு-கிழக்கு யுத்தத்தில் வெற்றியீட்ட வேண்டும் என்ற அக்கறை மக்களின் பிரதிநிதிகள் பலரிடம் காணப்படவில்லை என்றும்—

தமது பதவிகளைப் பாதுகாப்பதில் தான் அவர்கள் அக்கறை காட்டி வருகின்றனர் என்று கூறப்படுவதாகவும்—

திரு; ஜெயசூரியா தெரிவித்தார்.

யுத்தத்தினால் துன்பம்

யுத்தம் காரணமாக துன்பங்களையும் குறைபாடுகளையும் மக்கள் அனுபவிக்கவேண்டியிருப்பதாக கொழும்பு உட்பட பல நகரங்களிலும் மற்றும் தாம் சுற்றுப்பயணஞ் செய்த இடங்களிலும் பலர்

(5 ஆம் பக்கம் பார்க்க)

யாழ். நகரில் நாளை மீட்பு நிதி சேகரிப்பு

யாழ்ப்பாணம், அக். 14

உதவி அரசாங்க அதிபர் பிரிவு தோறும் தமிழீழ மீட்பு நிதி சேகரிக்கும் பணியில், நாளை வியாழக்கிழமை யாழ்ப்பாணம் உதவி அரசாங்க அதிபர் பிரிவில் வாழும் மக்களிடம் சேகரிக்கப்படும்.

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியில் நாளை பி.ப 2 மணி தொடக்கம் 5 30 மணி வரை மீட்பு நிதி சேகரிக்கப்படும். இதற்கான சகல ஏற்பாடுகளும் செய்யப்பட்டிருப்பதாக தமிழீழ விடுதலைப் புலிகளின் தமிழீழ மீட்பு நிதிப் பிரிவினர் தெரிவித்தனர். [அ]

காயமுற்ற என்னை வாகனத்தில் ஏற்றி

கண்களைக் கட்டி விட்டு நகைகளைப் பறித்தனர்!

இளவாலையிலிருந்து தப்பி வந்த பெண் தகவல்

யாழ்ப்பாணம், அக். 14

"துப்பாக்கிச் சூட்டினால் காயமுற்ற என்னை வாகனம் ஒன்றில் ஏற்றிய படையினர், எனது கண்களைத் துணியினால் இறுக்கக் கட்டிவிட்டு எனது கழுத்திலிருந்த 7 பவுண் தாலிக் கொடியையும் மற்றும் சங்கிலி, காப்பு போன்ற நகைகளையும் பறித்து எடுத்தனர்.

—இளவாலையைச் சேர்ந்த திருமதி இராசமணி மரியதாஸ் [வயது 46] இப்படித் தெரிவித்தார்.

இளவாலையிலிருந்து நேற்று யாழ்ப்பாணம் வந்து சேர்ந்த அவர் தமக்கு ஏற்பட்ட அனுபவம் குறித்து கூறியதாவது:-

கடந்த ஆகஸ்ட் 20 ஆம் திகதி நானும் எனது கணவரும் தோட்டத்தில் நின்ற போது திடீரென இராணுவ நடவடிக்கைகள் ஆரம்பமாகின. நானும் கணவரும் ஒருவரை விட்டு ஒருவர் பிரிந்து ஒவ்வொரு பக்கமாக ஓடினோம்.

சூடு விழுந்தது

எமது வீட்டில் விட்டு வந்த வயோதிபத் தாய், தந்தையரைப் பார்ப்பதற்காக மாலையில் தோட்டப் பகுதிகள் ஊடாக வீடு நோக்கிச் சென்றேன்.

வீட்டை அண்மித்தபோது திடீரென வந்த துப்பாக்கி வேட்டு எனது தொடையைத் துளைத்தது. நான் அவ்விடத்

(2 ஆம் பக்கம் பார்க்க)

இளவாலைச் சந்தியில் வைத்து

படையினர் சுட்டுக் கொன்ற 4 பேரின் சடலங்கள் கிணற்றில்!

யாழ்ப்பாணம், அக். 14

ஆகஸ்ட் 18 ஆம் திகதி இளவாலைப் பகுதியில் இராணுவ நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டபோது இளவாலைச் சந்தியில் வைத்து ஐந்து பேரை படையினர் சுட்டுக்கொன்றனர்:

அளவெட்டி, இளவாலைப் பகுதியிலிருந்து மீண்டு வந்தவர்கள் இத்தகவலைத் தெரிவித்தனர்.

அவர்கள் மேலும் தெரிவித்ததாவது:-

முப்பது முதல் முப்பத்தைந்து வயது மதிக்கத்தக்க நால்வரும் 50 வயது மதிக்கத்தக்க மற்றொருவருமே படை[illegible] பட்டனர்.

[illegible]

850 தொன் சீனி 'குமணவில்' வருகிறது

யாழ்ப்பாணம், அக் 14

'குமண' கப்பலில் 850 மெற்றிக் தொன் சீனி அனுப்பப்படவிருப்பதாக யாழ் அரச அதிபருக்கு அத்தியாவசிய சேவைகள் நாயகம் அறிவித்துள்ளார்;

கொழும்பிலிருந்து இது சம்பந்தமான செய்தி நேற்று அரச அதிபருக்கு கிடைத்தது

இந்தக் கப்பலில் ஆயிரம் மெற்றிக் தொன் மில்சாட் அரிசியும், 100 மெற்றிக் தொன் மைசூர் பருப்பும், இரண்டுலட்சம் தீப்பெட்டிகளும் அனுப்பப்படவிருப்பதாக அரச அதிபருக்கு வந்த தகவலில் மேலும் தெரிவிக்கப்பட்டது.

'குமண' கப்பலில் யாழ்ப்பாணத்துக்குக் கொண்டுவரப்படும் பொருள்கள் இப்போது ஏற்றப்படுகிறன.

[அ-3]

கானகம் செழித்தால் - இவ்
வானகம் பொழியும்

சித்ராலயா யாழ்நகரில்

★ போட்டோஸ்ரற் பிரதிகள்
Photostat Copies

★ பாஸ்போட் படங்கள்
Passport Photographs

★ தேசிய அடையாள அட்டைப் படங்கள்
(அரச அங்கீகாரம் பெற்றவர்கள்)
National Identitity Card Photographers
(Government Approved)

★ கறுப்பு வெள்ளைப் புகைப்படங்கள் வேண்டிய அளவுகளில் பெரிதாக்கல்
Black and White Photographs Enlargments

★ கலர்ப் புகைப்படங்கள்
(மங்கல வைபவங்கள் உட்பட)
Colour photographs (Indoor and outdoor)

போன்ற உங்கள் சேவைகளுக்கு என்றும்

சித்ராலயா

172, ஸ்ரான்லி வீதி (அருச்சுனா வீதி),
யாழ்ப்பாணம்.
(இ/3590)

VACANCY

For A Qualified Pharmacist

Wanted for immediate appointment a Qualified Pharmacist in the Unified Medical Service of the Jaffna Diocese of the Church of South India.

Salary Negotiable.

Retired Pharmacist may also apply before-31 - 10 - 1992 to:

THE MEDICAL SUPERINTENDENT,
Green Memorial Hospital,
MANIPAY.

(C-3589)

புகைப்படக் கலைஞர்களுக்கு

ஓர் நற்செய்தி!

யாழ். றோட்டறக்ற் சமூகம் ஓர் புகைப்படக் கண்காட்சியை நடாத்தவுள்ளது. அதில் உங்களின் படைப்புக்கள் இடம்பெறுவதை உறுதி செய்து கொள்ளுங்கள்.

படங்கள் தற்கால நிகழ்வுகளைச் சித்தரிப்பனவாயோ, இயற்கை எழில் நிறைந்தனவாயோ, புகைப்படக் கலைநுட்பத்தைப் பிரதிபலிப்பனவாயோ அமையலாம்.

சிறந்த படங்களுக்குப் பரிசில்கள் காத்துள்ளன.

படங்களை நீங்கள் ஒப்படைக்க வேண்டியது:-

இடம்:- **"விமலம்"**
நல்லூர் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம்.
(நாவலர் வீதியிலிருந்து 25 யார் தொலைவில்)

திகதி:- 17-10-92 (சனி)
18-10-92 (ஞாயிறு)

நேரம்:- காலை 9.00 நண்பகல் 12.00 வரை

(உங்கள் படங்கள் மீண்டும் கவனமாக ஒப்படைக்கப்படுமென உறுதியளிக்கிறோம்.)

(22884) — செயலாளர் —

31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



அமரர் செல்லப்பா மாணிக்கம்

(இளைப்பாறிய உப அதிபர்)

தாயின் மடியில்:
26 — 09 — 1918

இறைவன் அடியில்:
14 — 09 — 1992

அன்பின் குலவிளக்கே, தெய்வமே, மாணிக்கமே, அணையா தீபமே, நீங்கள் எங்களை விட்டுப் பிரிந்த காலம் தொடக்கம் நாங்கள் ஆற்றொணாத் துயரில் வாடுகின்றோம். உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

அன்னாரின் ஈமக்கிரியைகளில் கலந்துகொண்ட சகலருக்கும் எங்கள் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

அன்னாரின் பிரிவால் துயருறும்:

பெறாமக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், மைத்துனர், மைத்துனிமார்கள், சகோதர, சகோதரிகள், உறவினர்கள், அன்பர்கள்.

நாவடி, மாதனை,
பருத்தித்துறை.

5578)

உற்சவம்

சரித்திரப் பிரசித்திபெற்ற நாகர் கோவில் அருள்மிகு ஸ்ரீ பூர்வீக நாகதம்பிரான் ஆலய கடல் தீர்த்தத் திருவிழா நாளை வியாழக்கிழமை நடைபெறவுள்ளது. (உ-30)

இன்றைய ஆட்டங்கள்

கோண்டாவில் வடக்கு மத்திய கிராம முன்னேற்றச் சங்கம் நடத்தும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியின் இரண்டு ஆட்டங்கள் யாழ். தொழில்நுட்பக் கல்லூரி மைதானத்தில் இன்று மாலை நடைபெறவிருக்கின்றன.

குருநகர் தொடர்மாடி "ஏ" அணியை எதிர்த்து மயிலங்காடு ஸ்ரீ முருகன் "ஏ" அணியும் —

ஊரெழு றோயல் "ஏ" அணியை எதிர்த்து திருநகர் யாழ் பாரதி "ஏ" அணியும் மோதும். (உ)

★ ★ ★

நாவாந்துறை கலைவாணி சனசமூக நிலைய விளையாட்டுக் கழகம் 7 பேர் கொண்ட அணிகளுக்கிடையில் நடத்தும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் இன்று மாலை நடைபெறும் ஆட்டங்களின் விவரம் வருமாறு:

★ யாழ். ஹென்றீக் அணி எதிர் கொய்யாத் தோட்டம் அணி.

★ பாடும்மீன் அணி எதிர் பொற்பதி அணி.

நாளை

சர்வதேச வெள்ளைப் பிரம்பு தினம் தொடர்பான வைபவம் ஒன்றை சாவகச்சேரி லயன்ஸ் கழகத்தினர் நாளை பிற்பகல் 3 மணிக்கு சாவகச்சேரி உதவி அரச அதிபர் பணிமனையில் நடத்த உள்ளனர்.

இவ் வைபவத்தில் விழிப் புலன் இழந்தவர்களுக்கு வெள்ளைப் பிரம்புகள் வழங்கப்படும்.

★ ★ ★

சாவகச்சேரி வர்த்தகர்களின் அளவை, நிறுவை உபகரணங்களுக்கு முத்திரையிடும் பணி நாளையும் (வியாழனும்) நாளை மறுதினமும் நடைபெறும் (த-117)

கண்களைக்...

(1 ஆம் பக்கத்தொடர்ச்சி)

கீழேயே விழுந்தேன். காலிலிருந்து இரத்தம் பெருக்கெடுத்து ஓடியது.

நான் எழுந்து நடக்க முடியாது விழுந்தபடியே, உடலை இழுத்து, இழுத்து அருகிலிருந்த பற்றைக்குள் சென்றேன்.

பற்றைக்குள் இரண்டு நாட்கள், தாகத்துடனும், பசியுடனும் படுத்த படுக்கையாக இருந்தேன். இராணுவத்தினரின் நடமாட்டங்களைப் பார்த்துக் கொண்டிருந்தேன்.

படையினர் கண்டனர்

22 ஆம் திகதி நண்பகல் 11 மணியளவில் அப்பகுதிக்கு வந்த படையினர் என்னைக் கண்டு வாகனம் ஒன்றில் என்னை ஏற்றினர். வழியில் எனது கண்களைத் துணியால் கட்டி விட்டு எனது கழுத்தில் இருந்த ஏழு பவுண் தாலிக் கொடி, இரண்டரைப் பவுண் சங்கிலி, இரண்டு பவுண் காப்பு ஆகியவற்றைப் பறித்தெடுத்தனர். எனது காதில் இருந்த தோட்டையும் அவர்கள் கழற்ற முயன்றனர். நான் "ஐயா அதையாவது என்னிடம் இருக்கவிடுங்கோ!"— என்று கத்தினேன். அப்படிக் கத்தியதும் அவர்கள் தோட்டைக் கழற்றாமல் விட்டனர்.

மருந்து கட்டினர்

பின்னர் என்னை பலாலி ஆஸ்பத்திரிக்குக் கூட்டிச் சென்று காயத்திற்கு மாத்திரம் மருந்து கட்டினர்.

பதினைந்து நாட்களின் பின்னர் இளவாலை மடத்தில் இருந்தவர்களுடன் என்னைக் கொண்டு வந்து விட்டனர்.

துப்பாக்கிச் சூட்டுக் காயத்தினால் எனது கால் வழங்க முடியாத நிலையில் இருக்கிறது. இதனால் யாழ்ப்பாணம் வர என்னைப் படையினர் அனுமதித்தனர்.

அங்கு படையினரிடம் சிக்கிய பகுதிகளில் உள்ள வீடுகளை படையினர் உடைத்துச் சூறையாடி, பொருள்களை லொறிகளில் ஏற்றிச் செல்கின்றனர்; இரண்டு லொறிகள் நிறைய நீரிறைக்கும் இயந்திரங்களையும், தையல் இயந்திரங்களையும் படையினர் அங்கிருந்து ஏற்றிச் செல் [illegible] டேன் என்றார். (உ-13-18)

பெண்ணைக் கொலை செய்த முல்லைமுகாம் சிப்பாய் கைது

கொழும்பு, அக். 14

தென்பகுதியில் 21 வயதுடைய யுவதி ஒருவரை மானபங்கம் செய்த பின்னர் கொலை செய்த சம்பவம் ஒன்று தொடர்பாக முல்லைத்தீவு இராணுவ முகாமைச் சேர்ந்த சிப்பாய் ஒருவரை இராணுவப் பொலிஸார் கைது செய்தனர்.

முல்லைத்தீவு இராணுவ முகாமில் வைத்து சந்தேக நபர் கைது செய்யப்பட்டார். பின்னர் அவர் களுத்துறை வடக்குப் பொலிஸில் ஒப்படைக்கப்பட்டார்.

கடந்த வாரம் சந்தேக நபர் களுத்துறை நீதிமன்றத்தில் பலத்த பாதுகாப்புடன் ஆஜர் செய்யப்பட்டிருந்தார்.

இதேசமயம் கொலையுண்ட பெண்ணின் சடலம் கடந்த மார்ச் மாதம் 20 ஆம் திகதி வஸ்கடுவை கடற்கரையில் கண்டுபிடிக்கப்பட்டது. (ஒ-எ)

சுகாதார அமைச்சின்

பெண் உதவிச் செயலர் எய்ட்ஸுக்கே பலி!

உயர் அதிகாரி ஊர்ஜிதம்

கொழும்பு, அக். 14

சுகாதார அமைச்சில் உதவிச் செயலாளராகப் பணிபுரிந்து வந்த பெண் ஒருவர் எய்ட்ஸ் நோய் காரணமாகவே உயிரிழந்தார் என்றும்— சுவாசம் தொடர்பான (ARDS - Acute Respiratory Distress Syndrome) ஏ. ஆர். டி. எஸ். நோய் காரணமாக அவர் உயிரிழக்கவில்லை என்றும் சுகாதார அமைச்சின் முக்கிய உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்திருக்கிறார்.

அதனைத் தொடர்ந்து, அப்பெண் உதவிச் செயலாளர் பயன்படுத்திய படுக்கை விரிப்புகள், மெத்தை மற்றும் பொருள்கள் அழிக்கப்பட்டுவிட்டன என்றும் அந்த அதிகாரி கூறினார்.

இறந்தவரின் இரத்தத்தைப் பரிசோதனை செய்த கொழும்பு பெரியாஸ்பத்திரியின் வைத்திய நிபுணர்கள் அந்தப்பெண் எய்ட்ஸ் வைரஸினால் பிடிக்கப்பட்டிருந்தார் என்று குறிப்பிட்டனர். (ஒ-எ)

செய்முறைப் பரீட்சை

யாழ்ப்பாணம், அக். 14

1992 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதத்துக்கான ஜி.சி.ஈ.(உயர் தர) பரீட்சையின் மனையியல் செயல்முறைப் பரீட்சைக்கான வினாத் தாள்களும், அனுமதி அட்டைகளும் யாழ். கல்வி அலுவலகத்துக்கு வந்து சேர்ந்துள்ளன.

இந்தப் பரீட்சைக்கான திகதியை கல்விப்பணிப்பாளர் விரைவில் அறிவிப்பார். (உ-8)

பருத்தித்துறை / வண்ணாந்துறை
எரிஞ்சம்மன் கோவில்

விசேட உற்சவ நிகழ்ச்சி

14 - 10 - 92 புதன் கிழமை இரவு

கலை நிகழ்ச்சிகள்

மேளக் கச்சேரி, சமயச் சொற்பொழிவு

வில்லிசை

"சித்தாந்த நல் அறிஞர்" "கலைமாமணி" S.S. சர்மா அவர்களின்
ஸ்ரீதேவி வில்லிசைக் குழுவினர் வழங்குவர்

மெல்லிசை

ஈழ நல்லூர் ரங்கன் - சப்தஸ்வர இணைந்து வழங்கும்
"மெல்லிசை வார்ப்பு"

(22885) — உபயகாரர்கள்.

மரக்கன்றுகள் விற்பனைக்கு

மலைவேம்பு, இலுப்பை, வேம்பு, முதிரை, கடுக்காய்

ஆகிய வன வளர்ப்புத் தாவரக் கன்றுகள் எம்மிடம் மொத்தமாகவும், சில்லறையாகவும் விற்பனைக்கு உள்ளன. வாங்க விரும்புவர்கள் கீழ்வரும் முகவரியில் தொடர்பு கொள்ளவும்.

243, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

(இ/3484)

---

31 ஆம் நாள் நினைவஞ்சலி

மலர்வு:
21 — 08 — 1938

உதிர்வு:
14 — 09 — 1992

★ ★
★

அமரர் இரத்தினம் பழனித்துரை

பிறந்த வீட்டிற்கு தலைமகளாய்
குறைவில்லா சகோதரியாய் - கண்
நிறைந்த கணவனை பிரிந்து - பின்னும்
மனம் நிறைந்த பிள்ளைகளை பிரிந்து - கணவர்
சென்ற வழியில் அவருடன் சேர்ந்தாயோ !

இவரின் ஆத்மா சாந்தியடைய நல்லூர் கந்தனை பிரார்த்திக்கின்றோம்.

தந்தை, சகோதரி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்,
உறவினர், நண்பர்கள்.

109/8 சிவன் புதுவீதி,
நல்லூர்,
யாழ்ப்பாணம்.

(22892)

அகதிகளை அனுப்பும் சூழ்நிலை உண்டா?

பிரிட்டிஷ் அமைச்சர் நாளை வவுனியாவுக்கு வருகிறார்

கொழும்பு, அக். 14

அகதிகளைத் திருப்பி அனுப்புவதற்கான சூழ்நிலை நிலவுகின்றதா என்பதை அறிந்து கொள்ள பிரிட்டிஷ் அமைச்சர் ஒருவர் நாளை வியாழக்கிழமை வவுனியாவுக்கு விஜயம் செய்யவிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

'பிரிட்டனின் வெளிவிவகார, பொது நலவாய மற்றும் தெற்காசிய விவகாரங்களுக்கு பொறுப்பான அமைச்சராகப் பணிபுரியும் திரு. மார்க் லெனோக்ஸ் பொயிட் இந்த விஜயத்தை மேற்கொள்கின்றார்.

இவர் நேற்று கொழும்பு வந்தடைவதாக இருந்தது.

இம் மாதம் 18ஆம் திகதி வரை கொழும்பில் தங்கி நிற்கத் திட்டமிட்டுள்ள இவர், வெளியுறவு அமைச்சு அதிகாரிகளுடனும் பேச்சுகளை நடத்தவிருக்கிறார்.

இவருடன் பிரிட்டிஷ் வெளியுறவு அமைச்சின் தெற்காசியப் பிரிவுத் தலைவர் மார்ட்டின் வில்லியமும் வருகின்றார்.

இதே வேளை — கொழும்பில் உள்ள அவுஸ்திரேலிய பிரதி உயர்ஸ்தானிகர் எதிர்வரும் 17ஆம் திகதி வவுனியாவுக்கு விஜயம் செய்யவிருக்கின்றார்.

பிரிட்டிஷ் அமைச்சரும் அவுஸ்திரேலிய பிரதி உயர்ஸ்தானிகரும் வவுனியாவில் உள்ள பாதுகாப்பு அதிகாரிகளையும் ஏனைய அமைப்புகளையும் சந்தித்துப் பேச்சுகள் நடத்துவர் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

பிரிட்டன் மற்றும் அவுஸ்திரேலியா ஆகிய நாடுகளில் தங்கியுள்ள வன்னித் தமிழ் அகதிகளை திருப்பி அனுப்பும் சாத்தியம் பற்றி ஆராய்வதே இவ்விருவரின் விஜயத்தின் நோக்கம் என்று கொழும்பில் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

[ஒ-எ]

இலங்கையில்

மனித உரிமைகள் மீறல்; சுவீடன் மாநாட்டில் கேள்வி

அரசு தரப்பு எம். பி. தகவல்

இலங்கையில் நடைபெற்றதாகக் கூறப்படும் மனித உரிமைகள் மீறல் சம்பவங்கள் தொடர்பாக சுவீடனில் அண்மையில் நடைபெற்ற அனைத்துலக நாடாளுமன்றச் சங்கங்களின் மாநாட்டில் சுவீடனின் மனித உரிமைகள் குழு பெரும் அக்கறை காட்டியது.

இம் மாநாட்டில் கலந்து கொண்ட இலங்கை நாடாளுமன்ற உறுப்பினர்களிடம் நான்கு நாடுகளின் சபாநாயகர்களைக் கொண்ட குழு ஒன்றினால் இது தொடர்பான விவரங்களும் கேட்கப்பட்டனவாம்.

லங்காதீப வார இதழ் இச் செய்தியினை வெளியிட்டுள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது;

எதிர்க்கட்சி உறுப்பினர்களான மகிந்த ராஜபக்ஷ, வாசுதேவ நாணயக்கார, சி. வி. குணரத்ன ஆகியோர் முன்னர் தெரிவித்த குற்றச்சாட்டுகளின் அடிப்படையிலேயே மேற்படி கேள்விகள் கேட்கப்பட்டன என்று இம் மாநாட்டில் கலந்து கொண்ட கம்பஹா மாவட்ட ஐக்கிய தேசியக் கட்சி எம். பி. திரு. டொனால்ட் திஸநாயக்கா தெரிவித்தார்.

சுவீடன் தலைநகர் ஸ்ரொக்ஹோமில் நடைபெற்ற இம் மாநாட்டில் சபாநாயகர் எம். எச். மொஹமட், நாடாளுமன்ற உறுப்பினர்கள் தினேஷ் குணவர்த்தன, அனுருத்த ரத்வத்த, மகேந்திர விஜேரட்ன ஆகியோரும் கலந்து கொண்டனர்.

மாநாட்டில் 101 நாடுகளைச் சேர்ந்த ஆயிரத்து 400 பேர் கலந்து கொண்டனர்.

[த-10]

நிறைவு விழா

யாழ்ப்பாணம், அக். 14

யாழ். கச்சேரி கிழக்கு சனசமூக நிலையத்தின் 35 ஆவது ஆண்டு நிறைவு விழா இன்று கொண்டாடப்படுகிறது.

இதனையொட்டி இரவு 7 மணிக்கு கலை நிகழ்ச்சிகளும் இடம்பெறவுள்ளன.

[ஒ]

மா எடுத்துவர ஏற்பாடு

யாழ்ப்பாணம், அக். 14

பருத்தித்துறை வந்துள்ள 'குமாரி' கப்பல், பொருள்களை இறக்கி முடித்ததும் திருமலை சென்று 3,250 மெற்றிக் தொன் மாவை ஏற்றிக் கொண்டு வரவுள்ளது.

இரண்டொரு தினங்களில் இந்த பொருள்கள் இறக்கி முடிக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இதே வேளை இம்முறை "குமாரி"யில் அரிசி கொண்டு வரப்படவில்லை. "குமாரி"யில் தற்போது அரிசி, சீனி ஏற்றப்பட்டு வருவதாகவும், அவை விரைவில் இங்கு வரும் என்றும் கொழும்பிலிருந்து அறிவிக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாண மாவட்டத்தில் தற்போது 8 ஆயிரம் மெற்றிக் தொன் கோதுமை மா மட்டுமே கையிருப்பில் உள்ளது. குமாரியில் 1,850 மெற்றிக் தொன் மா வந்து சேர்ந்துள்ளது. அது திருமலை சென்று மேலும் 3,250 தொன் மாவை எடுத்து வரவுள்ளது.

[அ-10-162-17]

அல்லிப்பளையில் ஒதுங்கிய 3 சடலங்கள் அடக்கம்

உடைமைகள் காவல் நிலையத்தில்

தென்மராட்சி, அக். 14

கடந்த சனிக்கிழமை அல்லிப்பளை, கறுக்காய்ப் பகுதிக் கடற்கரைப் பகுதியில் துப்பாக்கிச் சூட்டுக் காயங்களுடன் கரை ஒதுங்கிய ஐந்து ஆண் சடலங்களில் ஒருவரின் சடலம் நேற்று முன்தினம் அடையாளம் காணப்பட்டது.

திருநெல்வேலி நாவலடி ஒழுங்கையைச் சேர்ந்த சின்னத்தம்பி மயில்வாகனம் (வயது 71) என்பவரின் சடலமே இவரின் மகனால் அடையாளம் காணப்பட்டது.

அல்லிப்பளை கரையில் ஒதுங்கிய மூன்று ஆண்களின் சடலங்களும் கிளாலியை அண்மித்த கரையில் ஒதுங்கிய ஓர் ஆணின் சடலமும் சாவகச்சேரி காவல்துறையினரால் அந்தந்த இடங்களிலேயே அடக்கம் செய்யப்பட்டன.

கறுக்காய்க் கரையில் ஒதுங்கிய ஓர் ஆணின் சடலமும் அந்த இடத்திலேயே அடக்கம் செய்யப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

சடலங்களிலிருந்து எடுக்கப்பட்ட உடைகள், கைக்கடிகாரம் ஆகியவை சாவகச்சேரி காவல் நிலையத்தில் உள்ளதாகவும் —

இப்பொருள்கள் மூலம் இறந்தவர்களை அடையாளம் காண உதவுமாறும் கோரப்பட்டது.

இவர்களுடன் பயணம் செய்த இரண்டு பெண்கள், ஒரு சிறுவன் ஆகியோரை இதுவரை காணவில்லை எனவும் தெரிவிக்கப்பட்டது.

[உ-117]

இந்தியா மீது சந்தேகமில்லை; அந்த யுகம் முடிந்துவிட்டது

டில்லியில் பிரேமா கூறினாராம்

கொழும்பு, அக். 14

இந்தியா பற்றி இலங்கை சந்தேகித்து வந்த யுகம் கடந்து விட்டது

ஜனாதிபதி பிரேமதாஸா முன்கண்டவாறு கூறினார்.

இலங்கை இன்னும் இந்தியா மீது சந்தேகம் கொண்டுள்ளதா என்று தம்மிடம் புதுடில்லியில் வைத்துக் கேட்கப்பட்டதாகவும் அந்த யுகம் கடந்து விட்டதாகத் தாம் பதிலளித்ததாகவும் அவர் சொன்னார்.

புத்தள மாவட்டத்தில் நடந்த கூட்டம் ஒன்றில் பேசுகையில் ஜனாதிபதி இத் தகவல்களை வெளியிட்டார்.

பல்கலைக்கழக
மாணவரின்
ஆய்வுக் கட்டுரைகள்

[illegible]
அழகுற அச்சிட்டு
பல்கலைக்கழக
நடைமுறை விதிகளுக்கு
அமைய
கட்டி (பையின்ட் செய்து)
உரிய நேரத்தில்
எடுப்பதற்கு
யாழ். நகரில்
அனுபவமும் ஆற்றலும்
வாய்ந்த ஒரே இடம்
பாரதி
பதிப்பகம்
A. B. PRINTERS
430, காங்கேசன்துறை வீதி,
(யாழ். இந்துக் கல்லூரி,
சிவதொண்டன் நிலையம்
ஆகியவற்றுக்கு அருகில்)
யாழ்ப்பாணம்.
(சி-3386)

இலங்கை செஞ்சிலுவைச் சங்கம்,
யாழ்ப்பாணக் கிளைத் தலைமையலுவலகம்

அதிர்ஷ்ட இலாபச் சீட்டிழுத்தல்

இலங்கை செஞ்சிலுவைச் சங்க யாழ். கிளை - சங்கானை உதவி அரசாங்க அதிபர் பிரிவின் மேற்படி அதிர்ஷ்ட இலாபச் சீட்டிழுப்பு 15 - 10 - 1992 வியாழன் பிற்பகல் 4-00 மணிக்கு வட்டுக்கோட்டை திருஞானசம்பந்த வித்தியாலயத்தில் நடைபெறும். அதிர்ஷ்ட இலாபச் சீட்டுக்கள் வாங்கியவர்கள் குலுக்கல் நடைபெறும் போது அவ்விடத்தில் சமுகமளிக்க வேண்டுகின்றோம்.

செஞ்சிலுவைச் சங்கச் சேவையில்,
கௌரவ செயலாளர்.

73, கண்டி வீதி,
யாழ்ப்பாணம்.
12 - 10 - 1992

[சி-3483]

LONDON ACCOUNTANCY CLASSES
MAY - JUNE 1993

★ C. I. M. A.	STAGE I STAGE II	Ist. Nov. 1992 21st Nov. 1992
★ A. A. T. (LONDON)	PRELIM INTER	Ist. Nov. 1992 Ist. Nov. 1992
★ I. A. B.	FOUNDATION INTER FINAL	Ist. Nov. 1992 Ist Nov. 1992 21st Nov. 1992

மேலதிக விவரங்களுக்கு:
NORTH CEYLON TECHNICAL INSTITUTE
(Result Oriented Institute in North)
14, St. Peter's Lane, Hospital Road,
JAFFNA

5ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தெல்லிப்பழையைச் சேர்ந்த
அமரர் கணபதிப்பிள்ளை வேலுப்பிள்ளை
(முன்னாள் நிறைவேற்று பொறியியலாளர்-
பெருந்தெருக்கள் திணைக்களம்)

தோற்றம்: 30 — 03 — 1915
மறைவு: 14 — 10 — 1987

உங்கள் ஆன்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்;

குடும்பத்தினர்,
உறவினர், நண்பர்கள்.

வே. யோகேந்திரா.
883/7, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

[22832]

சின்னஞ்சிறு விளம்பரம்

விற்பனைக்கு

பூச்சி நீக்கப்பட்ட நல்ல இன அல்ஷேஷியன் நாய்க்குட்டிகள் விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்ளும் முகவரி: ந. சரவணபவன், மே/பா புலவர் - வீடு, வட்டு. இந்துக்கல்லூரிக்கு பின்புறம் சித்தன்கேணி. (5379)

விற்பனையாகின்றது

சைவநெறி வினா-விடை (ஆண்டு 10-11) ஆக்கம் இலக்கிய வித்தகர் த. துரைசிங்கம் B, A. (Hons) Dip-in Ed. எல்லாப் புத்தகசாலைகளிலும் கிடைக்கும்; ஸ்ரீசாந்தா புத்தகசாலை, இல. 330, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். (22850)

மணமகள் தேவை

யாழ்; இந்து, வயது 50. ஜாதகக் குறிப்பில் கேது 2, சனி 5, குரு 6, வெள்ளி 8, செவ் 9, சந்தி 11ம் உள்ள, வருமானம் பெறும் ஆணுக்கு பொருத்தமான தொழில் புரியும் மணமகள் தேவை விபரங்களுடன் விண்ணப்பிக்கவும். இல. 452, மே/பா, உதயன், யாழ்ப்பாணம். (22844)

மாதிரி வினாத்தாள்கள்

O/L வகுப்புகளுக்கான கணிதம், விஞ்ஞானம், தமிழ், சமூகக்கல்வி, ஆங்கிலம், சமயம் (சைவம்/ றோம. க/ கிறிஸ்தவம்), வர்த்தகம் விவசாயம், மனைப் பொருளியல், சித்திரம், சங்கீதம், நடனம், ஆகிய பாடங்களுக்கான மாதிரி வினாத்தாள்கள் (விடைகளுடன்) மலிவு விலையில் விற்பனையாகின்றன. Bond Institute, 582, Stanley Road. Jaffna. (இ/3541)

வெளிவந்துவிட்டது

சைவநெறி ஆண்டு-10 தமிழ் மீட்டலுக்கான வினா-விடை ஆக்கம்: க. சந்திரசேகரம். மீள்பார்வை: ஆத்மஜோதி நா. முத்தையா அவர்கள். வெளியீடு: சோதி வெளியீட்டு காரியம். ஏகவிநியோகஸ்தர்கள்: ஸ்ரீலங்கா புத்தகசாலை, 234, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். (சி-3466)

ஆண்டு - 5 புலமைப் பரிசில்

அடுத்த புலமைப் பரிசில் பரீட்சைக்காக இப்பொழுது இருந்தே பயிற்சி அளிக்கும் ஆர்வமுள்ள பெற்றோர்களுக்காக மாதிரி வினாத்தாள்கள் எம்மிடம் பெற்றுக் கொள்ளலாம், வீட்டில் வைத்து விடை அளித்துத் தந்தால் இலவசமாகத் திருத்தி விடைகளுடன் கொடுக்கப்படும். Bond Institute. 582, Stanley Road, Jaffna. (இ-3540)

இடம்மாற்றம்

இதுவரை காலமும் கோவில் வீதி, நல்லூரில் இயங்கி வந்த சித்ரா லயா ஸ்ருடியோ 05-10-92 முதல் ஸ்ரான்லி வீதியில் உள்ள பழைய இடத்தில் இயங்குகின்றது என்பதை சகலருக்கும் அறியத்தருகின்றோம். (5364)

மனைப்பொருளியல்

மனைப்பொருளியல் வினா-விடை (ஆண்டு 10, 11) விற்பனையாகிறது. ஆக்கம்: செல்வி யசோதா துரைசிங்கம். பரீட்சையில் அதி உயர்ந்த சித்தியினைப்பெற உதவிடும் அரிய நூல். எல்லாப் புத்தகசாலைகளிலும் கிடைக்கும் பூபாலசிங்கம் புத்தகசாலை, யாழ்ப்பாணம். (22851)

ஆண்டு -6 அனுமதி

பாடசாலை அனுமதிப் பரீட்சைக்கான மாதிரி வினாத்தாள்கள் 01 - 10 - 92 முதல் 16 - 10 - 92 வரை மலிவு விலையில் பெற்றுக்கொள்ளலாம். Bond Book - Stall, 582, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். (இ-8539)

காணவில்லை

எங்கள் கன்வி மாடு ஒன்றை ஒரு வாரத்திற்குமுன் காணவில்லை. இது சொக்கிலேட் கலருடனும், கிள்ளக் கொம்புடனும் காணப்படும். இது பற்றி தகவல் தெரிந்தவர்கள் தயவுசெய்து எங்களுக்கு அறியத்தரவும். றெட்னா கபே, 720, ஆஸ்பத்திரி வீதி. யாழ்ப்பாணம். (22875)

இடம்மாற்றம்

அளவெட்டியில் இயங்கி வந்த மயூரா வைத்தியசாலை தற்பொழுது மல்லாகம் மாவட்ட நீதிமன்றத்திற்கு முன்பாக இயங்குகின்றது. (4997)

O/L கணிதம்

முக்கிய பாடமான கணித பாடத்தில் இதுவரை சித்தி அடையாதவர்களுக்கும் கணித பாடத்தில் ஆரம்ப அறிவு இல்லாதவர்களுக்கும் விசேட சித்திக்கு அனுபவம் உள்ளவரால் பயிற்றுவிக்கப் படுகின்றது. ஆண்டு 11 செல்லும் மாணவருக்கான புதிய வகுப்பும் நடைபெறுகின்றது. தொடர்பு: சக்தி தொழிலகம், கரன் மாஸ்ரர், இல: 131, பிறவுண் றோட், யாழ்ப்பாணம். (22847)

ஆசிரியர் சச்சிதானந்தனின் கணிதம் உதவி நூல்வரிசைகள், மடக்கைகள், விருத்திகள், புள்ளிவிபரவியல், திரிகோண கணிதம், மாதிரி வினாத்தாள்களும், செய்கைகளும் ஒவ்வொன்றும் ரூபா 20-00. மாணவர்கள் தாமாகவே மீட்டலை மேற்கொள்ள சிறந்த நூல்கள். (4983)

இலவச திருமண சேவை

30 வயது, அச்சுவினி, செவ்வாய்-8, கிரகபாவம் 61, அழகிய, படித்த பெண்ணுக்கு தகுந்த மணமகன் தேவை. வெளிநாடும் கவனிக்கப்படும். தொடர்பு: ஞாயிறு காலையில். து.விமலா, யாழ். நாச்சிமார் கோவிலடி. (22866)

41 வயது, மகம், செவ்வாய்-1, கிரகபாவம் 54, M.P.C.S விகிதருக்கு அரச, தனியார்துறை, வியாபாரம் மணமகன் தேவை. தொடர்பு: ஞாயிறு காலையில். து. விமலா, யாழ்; நாச்சிமார் கோவிலடி. (22867)

வாழ்த்து மடல்கள்

ஏராளமான டிசைன்களில் அழகிய தீபாவளி வாழ்த்து மடல்கள், லட்சுமி, சிவசங்கரி, ராஜேஸ், ராசேந்திரகுமார்கள் நாவல்களும், சிறுவர் அரிச்சுவடிகளும் விற்பனையாகின்றன: ராஜன் புத்தகசாலை, இல. 12, பஸ் நிலையம், யாழ்ப்பாணம். (22848)

NEW SCIENCE ACADEMY
Nallur.

A/L
93 & 94
LOGIC

ஆசிரியர்:
A.விக்கி

செவ்வாய், வியாழன்
நேரம்; 3-4 — 94
4-5 — 93

சனி ஞாயிறு
நேரம்: 4-5 — குறியீட்டு அளவையியல்
5-6 — பகுதி II அளவையியல்

ஆரம்பம்:
15-10-92
(இ-3478)

யாழ் நகரில் ஒரு புதிய புடைவை மாளிகை

"எழினி"

இன்று புதன்கிழமை
காலை 9-00 மணிமுதல் ஆரம்பம்

- ● கண்ணைக் கவரும் வர்ணத்தில் அமைந்த சிறந்த ரகச் சேலைகள், துணிவகைகள்.
- ● ஆடவர்களுக்கான சேட்டிங், சூட்டிங்.
- ● நவீன டிசைன்களில் அமைந்த தைக்கப்பட்ட ஆடைகள்.
- ● சிறுவர் குழந்தைகளுக்கான ஆடைகள்.
- ● இன்னும் பல;

★ சிறந்த ரகம்! ★ குறைந்த விலை!!
★ நிறைந்த சேவை!!!

உங்கள் தீபாவளிப் பண்டிகையை எழினியுடன் பகிர்ந்து கொள்ள அன்புடன் அழைக்கின்றோம்.

பெரிய கடை,
யாழ்ப்பாணம். (22877)

தட்டச்சு - றோணியோ

சகல விதமான தட்டச்சு - றோணியோ இயந்திரங்கள் வாங்கவும் விற்கவும், சிறந்த முறையில் திருத்தி குறித்த தவணையில் பெற்றுக் கொள்ளவும்;

இன்றே நாடுங்கள்:
"ஒவ்வீஸ் இக்யூப்மென்ட் லிமிட்டெட்"
140, நாவலர் றோட்,
யாழ்ப்பாணம். (இ-3538)

யாழ்ப்பாணக் கல்லூரி

பதவி வெற்றிடம்

க. பொ. த. (உயர்தரம்) தாவரவியல் க.பொ.த: (சாதாரணம்) விஞ்ஞானம் கற்பிக்கக்கூடிய ஆசிரியர் தேவைப்படுகின்றார். தாவரவியலுடன் விலங்கியலும் கற்பிக்கத் தகுந்தவர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும்; 24 - 10 - 1992 சனிக்கிழமைக்கு முன் விண்ணப்பிக்கவும்.

- முதல்வர்.

கல்லூரிப் பூங்கா,
வட்டுக்கோட்டை. (இ-3587)

31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

கனடாவில் சிவபதமடைந்த
அமரர்
வேலுப்பிள்ளை முத்துக்குமாரசாமி
(ஓய்வுபெற்ற பட வரைஞர்)

அன்னையின் மடியில்: 14 — 09 — 1936
ஆண்டவன் அடியில்: 14 — 09 — 1992

அன்பின் திருவுருவாய்! அறிவின் சுடரொளியாய்!
பாசத்தின் உறைவிடமாய்! குடும்பத்தின்
ஒளி விளக்காய்!
அந்தி பகலாய்! அயராது உழைத்து வாழவைத்த
எங்கள் அன்புத் தெய்வமே!
ஆறாத்துயரில் ஆழ்த்திச் சென்ற அன்பின் அப்பாவே!
உங்கள் ஆத்மா சாந்தி அடைய பிரார்த்திக்கும்
அன்பு உள்ளங்கள்;

மனைவி, பிள்ளைகள்,
குடும்பத்தவர்கள்.

"அன்னவாசம்",
நுணாவில் கிழக்கு,
சாவகச்சேரி.

42/1, 1st Lane,
Dehiwela.
(இ-3479)

1ஆம் ஆண்டு நினைவுகள்

தோற்றம்:
17 — 10 — 1966

மறைவு:
26 — 09 — 1991

திருமதி
நிர்மலா கிருஷ்ணகுமார்
(ராசாத்தி)

திதி: 14 — 10 — 1992

நிமலன் நிழல் நிர்மலமானது
நித்தமும் நின் மனம் நிறைமதியானது
நிகழ்வன யாவும் நியதியென்றெண்ணி
நிம்மதி நிலை பெற நித்தமும் தொழுவோம்.

பிரிவால் துயருறும்:
கணவன், பிள்ளைகள்,
குடும்பத்தினர்.

"ஜோய் இல்லம்",
உடுவில் மகளிர் கல்லூரி,
உடுவில்;
(5877)

உதயன்

கணக்கு ஒன்று தான்!

இனப்பிரச்சினைக்கான தீர்வு ஒன்றை வகுப்பதற்கென நியமிக்கப்பட்ட நாடாளுமன்றத் தெரிவுக்குழு, தீர்வுக்கான திசை நோக்கி இன்னும் ஓர் அடி தானும் முன்னுக்கு எடுத்து வைத்ததாகத் தகவல் இல்லை!

அதனாலோ என்னவோ, குழுவின் தலைவர் திரு. மங்கள முனசிங்கா தாம் தனிப்பட்ட முறையில் ஒரு திட்டத்தை வகுத்திருக்கிறார். அதனைத் தெரிவுக்குழுவிடம் உத்தியோகபூர்வமாகச் சமர்ப்பிப்பதற்கு முன்னர் வெளியே ஆதரவு திரட்டி வருகிறார்.

திரு. முனசிங்காவின் திட்டம் குறித்து முழு விவரமும் இன்னும் தெரியவரவில்லை. மேலெழுந்தவாரியான தகவல்களே வெளியாகி உள்ளன. வடக்கு-கிழக்குக்குப் பொதுவான பிராந்திய சட்டசபையையும், அதன் கீழ் இயங்கக் கூடியதான இரண்டு தனித்தனி மாகாண சபைகளையும் நிறுவுவது என்பதே அவரின் திட்டம். மாகாண சபைகளுக்கும், பிரதேச சட்ட சபைக்கும் உறுப்பினர்கள் வெவ்வேறாகத் தெரிவு செய்யப்படுவார்களா, அல்லது மாகாணசபை உறுப்பினர்களே சட்டசபையிலும் பதவி சால் அங்கத்தவர்களாக இருப்பார்களா என்பது பற்றிய விவரமும் வெளியிடப்படவில்லை.

ஆனால் இந்தத் திட்டம், கிட்டத்தட்ட தெரிவுக்குழு இவ்வருடம் ஜூன் மாதம் 18ஆம் திகதி தமிழ்க் கட்சிகளிடம் சமர்ப்பித்த பிராந்திய மேற்சபை (Apex Council) திட்டத்தை ஒத்ததாகவே உள்ளது எனலாம்.

பெயரளவில் இருக்கும் வேறுபாடு உள்ளமைப்பில் இருப்பதாகத் தெரியவில்லை. ஒன்று சக ஒன்று சமன் இரண்டு என்று தெரிவுக்குழு யோசனை கூறியதை, இரண்டு சமன் ஒன்று சக ஒன்று — எனத் தெரிவுக் குழுவின் தலைவர் முனசிங்கா கூறியுள்ளார். ஆனால் கணக்கு ஒன்று தான்!

இங்கேயும் வடக்கு-கிழக்கு இணைப்புத் தவிர்க்கப்பட்டுள்ளது. வழமை போலவே ஒற்றையாட்சிக் கட்டமைப்பின் கீழ் அதிகாரப் பரவல் செய்யும் வழிமுறையாக அமைந்துள்ளது. இணையாட்சிக் கட்டமைப்பின் கீழ் தமிழர்கள் மாநில சுயாட்சி உரிமையை அனுபவிப்பதற்கான ஆரம்ப எத்தனம் தானும் செய்யப்படவில்லை

முப்பத்தைந்து வருடங்களுக்கு முன்னர் — 1957 ஆம் ஆண்டில் — கைச்சாத்திடப்பட்டுக் கிழித்தெறியப்பட்ட பண்டா - செல்வா ஒப்பந்தத்தில் உள்ள பிராந்திய சபைகளை ஒத்ததாகத் தானும் முனசிங்காவின் பிராந்திய சபைகள் அமையவில்லை.

முப்பத்தைந்து வருடங்களின் பின்னர், இத்தனை வருடப் போராட்டங்களின் பின்னர் பல்லாயிரக்கணக்கான தமிழர்களை இழந்து, கோடானுகோடி பெறுமதியான உடைமைகளை இழந்து, தமிழ்ப் பிரதேசங்களின் வளங்களும், வனப்புகளும் சீரழிக்கப்பட்ட பின்னர், முப்பத்தைந்து வருடங்களுக்கு முன்னர் கிடைத்ததை விடக் குறைந்த உரிமைகளை (இல்லை, இல்லை சலுகைகளை) பெறுவதற்குத் தமிழர்கள் இன்னும் ஏமாந்தவர்கள் அல்லர்.

தமிழர்களின் அரசியல் அபிலாசைகளை ஓரளவேனும் — சிறிதளவேனும் — பூர்த்தி செய்வதானால் இந்நாட்டில் சமஷ்டி அரசமைப்பு உருவாக்கப்பட வேண்டும். அந்தச் சமஷ்டியின் கீழ் தமிழர்களுக்குச் சுயாட்சி, தனியாட்சி உரிமை வழங்கப்பட வேண்டும். தமிழர்கள் தனித்துவமான தேசிய இனம் என்பதை ஏற்றுக் கொண்டு அவர்களின் சுயநிர்ணய உரிமையை அங்கீகரிக்கும் தீர்வு ஒன்று தேவை.

இவ் விடயத்தில் சிங்களத் தலைவர்கள் காலத்தைக் கடத்த முயன்றால், தமிழர்கள் தமது உரிமைகளை தாமே வரித்துக் கொண்டு பிரகடனப்படுத்தி நிலைப்படுத்தும் தேவை உண்டாகும்.

பிரேமதாஸாவின் இந்திய விஜயத்தின் பின்னரும் தமிழருக்கான அதிகாரப் பகிர்வு விவகாரம் புதிரே!

நிலைவரத்தை புகைய அனுமதிப்பின் இந்தியா தலையிடும் நிலை உருவாகலாம்

இந்தியாவின் பிரபல பத்திரிகையாளரும், ராஜதந்திரியும், அண்மையில் கொழும்புக்கு விஜயம் செய்திருந்தவருமான — குல்தீப் நய்யார் ''வரிகளுக்கு இடையில்'' என்ற தலைப்பில் கொழும்பு ''சண்டே ஐலண்ட்'' மற்றும் ''சண்டே டைம்ஸ்'' பத்திரிகைகளில் எழுதிய கட்டுரையின் தொகுப்பை இங்கே பிரசுரிக்கிறோம்.

தமிழ்மொழி உத்தியோக மொழியாகியதைத் தவிர 1987 இல் ஜெயவர்த்தனாவும் ராஜீவ் காந்தியும் கைச்சாத்திட்ட இலங்கை - இந்திய உடன்படிக்கை என்பது வெறும் 'கடதாசி' யாகத் தான் இருக்கிறது

உடன்படிக்கை அமுல் செய்யப்பட்டு விட்டது என்று ஜெயவர்த்தனா விடுத்த அறிக்கை போன்றே, ஜனாதிபதி பிரேமதாஸா புதுடில்லிக்கு அளித்திருக்கும் உறுதியும் வெறும் கண்துடைப்பாகவே நிரூபிக்கப்படலாம். உண்மையில் தரைநிலையில் ஒன்றுமே இல்லை.

ராஜீவ் காந்தி கொலையின் பின்னர் தமிழகத்தில் இலங்கைத் தமிழர் நிலை பற்றி அவ்வளவு பிரதிபலிப்பு தெரியவில்லை. இந்த நிலைவரத்தில் மாற்றம் வர முடியாது என்பது இதன் அர்த்தம் அல்ல. இந்த அமைதி நிலையை எதுவும் குழப்பமுடியும் தமிழகத்தின் அரசியல் திருப்பங்களில் இது தங்கியுள்ளது.

முன்னேற்றம் இல்லையேல் எதிர்விளைவு

இலங்கைத் தமிழரின் நிலையில் முன்னேற்றம் ஏதேனும் தென்படாவிட்டால் —

கொழும்பு அரசின் இராணுவ நடவடிக்கை தொடருமானால் — தமிழகத்தில் எதிர் விளைவுகளை ஆரம்பிக்கும்.

தமிழகத்தின் சில கரையோரப் பகுதிகளில் வரையறுக்கப்பட்ட விதத்தில் கிளர்ச்சிகள் ஏற்கனவே தென்படுகின்றன.

இந்தியாவில் விடுதலைப் புலிகள் இயக்கம் தடைசெய்யப்பட்டதை ஆட்சேபித்து, டாக்டர் ராமதாஸ் தலைமையிலான பாட்டாளி மக்கள் கட்சி மேற்கொண்ட நடவடிக்கைகள் கிளர்ச்சிக்குச் சாதகமான விளைவை ஏற்படுத்தியுள்ளது.

''போராளிகள் மீது எமக்கு அனுதாபம் இல்லை; இதன் அர்த்தம் இலங்கைத் தமிழர் மீது எமக்கு அனுதாபம் கிடையாது என்பதல்ல'' — என்று கூறியதன் மூலம் தி. மு. க. தலைவரும் முன்னாள் முதலமைச்சருமான திரு. கருணாநிதி பெரும்பான்மையான தமிழர்களின் உணர்வுகளைப் பிரதிபலித்திருக்கிறார்.

விடுதலைப் புலிகளுடன் நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ தொடர்பு வைப்பதை புதுடில்லி ஜாக்கிரதையாகத் தவிர்த்து வருகின்றது.

இராணுவத்தீர்வு சாத்தியமல்ல

தமிழர் பிரச்சினைக்கு இராணுவத்தீர்வு சாத்தியமானதல்ல என்பது அனுபவத்தில் தெரிகிறது. நிச்சயமாக இராணுவத்தீர்வு தாக்குப் பிடிக்கக் கூடியதும் அல்ல.

இந்திய அமைதிப்படையையே தூரத்தே நிறுத்தி வைத்த தமிழீழ விடுதலைப் புலிகள் கெரில்லாப் போர் முறையில் நன்கு பயிற்சி பெற்றிருக்கின்றார்கள். நல்ல ஆயுத வசதிகளும் அவர்களிடம் உள்ளன.

ஜே. ஆரின் விளையாட்டுக்கள்

அதிகாரப்பகிர்வு குறித்து திரு. ஜெயவர்த்தனா பாரதூரமாகச் சிந்தித்திருப்பாரேயானால், குறைந்த நிபந்தனைகளுடன் கூடிய தீர்வு ஒன்றை, நீண்டகாலத்துக்கு முன்னரே கொண்டுவந்திருக்க முடியும். ஜெயவர்த்தனா பல விளையாட்டுக்களை விளையாடியிருக்கின்றார். ஒரே நேரத்தில் பலவிஷயங்களை பலருக்கு ஜெயவர்த்தனா கூறி வந்திருக்கிறார்.

அண்மையில் நான் கொழும்பு சென்றிருந்த போது சிங்களவரின் மனப் போக்கில் பெரிய மாற்றத்தைக் கண்டேன். தமிழருக்கும் இடமளிக்கப்பட வேண்டும் என்ற உணர்வு சிங்களவர்களிடையே அதிகரித்து வருகிறது. தேர்தல் ஆட்சேபனை மனு வழக்கில் வெற்றியீட்டிய பிரேமதாஸாவுக்கு இது ஒரு கூடுதல் புள்ளியாகும்.

பிரேமாவுக்கு உள்ள பணி

பிரேமதாஸ இது விஷயத்தில் முன் முயற்சி மட்டுமே எடுக்க வேண்டியுள்ளது. தமிழரின் ஆதரவைப் பெறும் அவரது முயற்சிக்கு ஆதரவாக பெரும்பான்மையானவர்கள் மௌனமாக இருப்பதை அவர் காணலாம்.

ஜெயவர்த்தனா விட்ட இடத்தில் இருந்து பிரேமதாஸா தொடர வேண்டும். ஆனால் நிலைவரத்தைப் புகைய அனுமதிப்பின் புதுடில்லி தாம விரும்பாமலே பிரச்சினைக்குள் தலையிடக் கூடிய நிலை ஏற்படலாம்.

ஜனாதிபதி பிரேமதாஸா இந்தியாவுக்கு விஜயம் செய்த பின்னரும் தமிழருக்கு அதிகாரப் பகிர்வு வழங்கும் நடைமுறை ஒரு புதிராகவே தொடருகின்றது. ★

வவுனியாவில் 2 படையினர் பலி

வவுனியாவில் நேற்று முன்தினம் படையினர் சென்ற வாகனம் ஒன்று பள்ளத்தில் விழுந்து புரண்டதில் இரு படையினர் கொல்லப்பட்டனர்.

விவசாயிகள் வாரம்

யாழ். மாவட்டத்தில் இன்று முதல் 20 ஆம் திகதி வரை விவசாயிகள் வாரம் கொண்டாடப்படவிருக்கிறது.

இவ்விவசாய வாரத்தில் சகல கமநல சேவை நிலையங்களிலும் விவசாயிகள் கௌரவிக்கப்படவுள்ளனர்.

விவசாயிகளுக்கு பயன்தரக் கூடிய கண்காட்சிகள், கருத்தரங்குகள், சிரம தானங்கள் போன்றவற்றை இத்தினங்களில் நடத்தவும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

(உ-162)

எகிப்தில் 1000பேர் மரணம்

எகிப்து தலைநகர் கெய்ரோவில் நேற்று முன்தினம் ஏற்பட்ட நில நடுக்கத்தில் உயிரிழந்தோரின் எண்ணிக்கை 1000க்கும் அதிகம் எனவும் 4 ஆயிரத்துக்கு மேற்பட்டோர் காயமடைந்தனர் எனவும் நேற்று தெரிவிக்கப்பட்டது.

கட்டடங்களின் இடிபாடுகளுக்குள் மேலும் பலர் சிக்கியிருக்கலாமெனவும் அச்சம் தெரிவிக்கப்பட்டது.

இளவாலையில்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

55), தம்பையா கனகராஜன் (வயது 75).

இவர்களைத் தவிர அளவெட்டியைச் சேர்ந்த சின்னத்தம்பி சிவலிங்கம் (வயது 94), அவரது மனைவி நாகரத்தினம் (வயது 82) ஆகியோரும் கட்டிவரப்பட்டுள்ளனர்;

இந்த ஐவரில் திருமதி நாகரத்தினம் தவிர்ந்த ஏனைய நால்வருமே யாழ். ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டிருக்கின்றனர். (உ-3-13-15-162-165)

சிங்களவர்...

(1 ஆம் பக்கத்தொடர்ச்சி)

கூறத் தாம் கேட்டதாகவும் — திரு ஜெயசூரியா கூறினார்;

அவர் தமது பேட்டியில் மேலும் தெரிவித்ததாவது;-

வடக்கு - கிழக்கு போர் முனையில் படையினர் படும் இன்னல்களை அரசுத் தலைவர்கள் படையினருடன் பதுங்கு குழிகளில் ஓர் இரவைக் கழிப்பதன் மூலம் தெரிந்து கொள்ளவேண்டும்; அப்படி அரசுத் தலைவர்கள் பதுங்குகுழி அனுபவம் பெறச் செல்லும்போது தொலைக் காட்சிக் கமராக்கள் இன்றிச் செல்லவேண்டும்.

கிராமப்புற இளைஞரே களத்தில்

தென் இலங்கையைச்சேர்ந்த கிராமப்புறச் சிங்கள இளைஞர்களே வடக்கு - கிழக்குப் போர் முனையில் சண்டையிடுகின்றனர். இதனால் தென் இலங்கையில் நகர்ப்புற மக்களுக்கு எதிரான உணர்வு கிராமப்புற மக்களிடையே ஏற்பட்டு வருகிறது.

படையினரின் தேவைகளைப் பூர்த்தி செய்ய - மாணவருக்கான இலவச சீருடைத் திட்டம், எயர்பஸ் விமானக் கொள்வனவு ஆகியவற்றைச் சில காலத்துக்கு ஒத்தி வைத்து, அவற்றுக்கு ஒதுக்கப்படும் நிதியைப் பயன்படுத்தலாம். — என்றார்.

(அ-எ)

சுதந்திரக் கட்சியின்

எம். பீ. ராஜரத்தினம் விரைவில் ராஜினாமா!

அந்த இடத்துக்கு சந்திரிகா?

கொழும்பு, அக். 14

சுதந்திரக் கட்சி எம். பீ. திரு. பீ. டபிள்யூ. ராஜரத்தினம் சுகயீனம் காரணமாக தமது பதவியை ராஜினாமாச் செய்வார் என எதிர்பார்க்கப் படுகிறது.

அதனால் காலியாகும் அந்த இடத்துக்கு திருமதி சந்திரிகா குமாரணதுங்காவை சுதந்திரக்கட்சி நியமிக்கக் கூடும் என்று கொழும்பில் ஊகம் வெளியிடப்பட்டுள்ளது.

ஆனால், திருமதி சிறிமா பண்டாரநாயக்காவின் நெருங்கிய வட்டாரங்கள் வெளியிட்ட தகவல்களின்படி —

திருமதி குமாரணதுங்காவை எம். பீயாக நியமிக்கும் எண்ணம் திருமதி பண்டாரநாயக்காவுக்கு இல்லை என்றும் —

சிறுபான்மை சமூகத்தைச் சேர்ந்த ஒருவரே காலியிடத்துக்கு நியமிக்கப்படுவார் என்றும் சண்டே டைம்ஸ் தகவல் வெளியிட்டிருக்கிறது.

ஓய்வுபெற்ற சுப்பிரீம்கோர்ட் நீதியரசரான திரு ராஜரத்தினம் தேசியப்பட்டியல் மூலம் எம். பீயாக சுதந்திரக்கட்சியால் நியமனம் செய்யப்பட்டவர் என்பது தெரிந்ததே.

சித்தவைத்தியம் பயில்வதற்கு

குறைந்தளவு மாணவர்கள் விண்ணப்பித்தமைக்கான காரணங்கள்

மாணவர் சங்கம் விளக்கம்

யாழ்ப்பாணம், அக். 14

சித்த மருத்துவத்துறைப் பட்டதாரிகளுக்கு தகுந்த நியமனங்கள் இதுவரை கிடைத்துள்ளன. அவர்களுக்கு மேலைத்தேச வைத்தியப் பட்டதாரிகளுக்கு வழங்கப்படும் அதே அளவு சம்பளமே உள்ளகப் பயிற்சியின் போது கூட வழங்கப்படுகிறது

எனவே இம்முறை சித்த வைத்தியம் பயில்வதற்கு குறைந்த எண்ணிக்கையான மாணவர்கள் விண்ணப்பித்தமைக்கு வேறு புறக் காரணிகளே ஏதுவாகும்;

இவ்வாறாக ''சித்த வைத்தியம் பயில்வதற்கு மாணவர் ஆர்வம் குறைவு'' என்ற தலைப்பில் 12 - 10 - 1992 உதயனில் வெளிவந்த செய்தி குறித்து சித்த மருத்துவ மாணவர் மன்றம் வெளியிட்ட விளக்க அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது

அந்த விளக்கத்தில் தெரிவிக்கப்பட்டுள்ள காரணங்கள் வருமாறு:-

★ சித்த மருத்துவத்துறையில் பயில்வதற்காக விண்ணப்பங்கள் கோரப்படும் போது யாழ்ப்பாணத்திலிருந்து வெளிவரும் பத்திரிகைகளில்மட்டும [illegible] பிலிருந்து வெளிவரும் தினசரிகளிலும் பிரசுரிக்கப்படுவது வழக்கம். ஆனால் இம்முறை யாழ்ப்பாணத்திலிருந்து வெளிவரும் பத்திரிகைகளில் மட்டும் விண்ணப்பிக்கும்படி விளம்பரம் செய்யப்பட்டிருந்தது; இதனால் வெளிமாவட்ட மாணவர்களுக்கு இது தொடர்பான சரியான தகவல் கிடைக்கவில்லை;

★ சித்த மருத்துவத்துறையில் பயில்வதற்கான விண்ணப்பப் படிவங்களை யாழ். பல்கலைக்கழகத்தில் மட்டும் பெற்றுக் கொள்ள முடியும். பல்கலைக்கழக மானிய ஆணைக் குழுவிலோ அல்லது யாழ்ப்பாணப் பல்கலைக்கழகக் கல்லூரியிலோ மேற்படி விண்ணப்பங்களைப் பெறுவதற்கான ஏற்பாடுகளைப் பல்கலைக்கழக நிர்வாகம் மேற்கொண்டிருந்திருந்தால் வெளிமாவட்ட மாணவர்கள் விண்ணப்பிப்பதற்கு வசதியாகவும் மற்றும் கடிதப் போக்குவரத்து தாமதங்களால் ஏற்பட்ட [illegible]

★ தற்போது வடக்கு-கிழக்கு பிரதேசங்களில் ஏற்பட்டிருக்கும் யுத்த நிலைமைகள் காரணமாக ஏற்பட்டிருக்கும் பல்வேறு பாதிப்புகளினாலும் மாணவர்கள் கல்வியைத் தொடர முடியாத நிலையில் இருப்பதும் இங்கு குறிப்பிடத்தக்கதொன்றாகும்;

சித்தமருத்துவத்துறையிலிருந்து இதுவரை இரண்டு தொகுதி பட்டதாரிகளே கல்வி முடிந்து வெளியேறியுள்ளனர். இவர்களில் முதலாவது தொகுதி பட்டதாரிகளில் நூறுவீதமானவர்களுக்கும் அரசாங்கம் தகுந்த நியமனங்களை வழங்கி உள்ளது; இரண்டாவது தொகுதி பட்டதாரிகளிற்கு நியமனம் வழங்குவதற்கான பூர்வாங்க ஏற்பாடுகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன

உள்ளகப் பயிற்சியில் ஈடுபடும் சித்தமருத்துவத்துறைப் பட்டதாரிகளிற்கும் மேலைத்தேய வைத்தியப் பட்டதாரிகளிற்கு வழங்கப்படும் அதே அளவு வேதனம் வழங்கப்படுகிறது — என்று அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது;

(அ)

ராணுவ...

(1 ஆம் பக்கத்தொடர்ச்சி)

பகுதியில் சிக்கியுள்ளவர்களின் விவரங்களை அங்கு அமைக்கப்பட்டுள்ள பிரஜைகள் குழு சேகரித்துள்ளது.

இளவாலை தேவாலயத்தைச் சேர்ந்தவர்கள் தவிர பொது மக்கள் சுமார் 300 பேர் வரை அங்குள்ளனர். அவர்களில் நூறு பேர் தமது உறவினர்களை பிரிந்துள்ளனர்; இவர்களில் 15 பேர் அப்பகுதியிலிருந்து வெளியேறி தமது உறவினர்களுடன் மீண்டும் வந்து சேர படையினர் அனுமதி வழங்கியுள்ளனர்;

ஏனையோரும் அங்கிருந்து புறப்பட்டு வருவதற்கான அனுமதியைப் பெறுவதில் அங்கு அமைக்கப்பட்ட பிரஜைகள் குழு ஈடுபட்டிருக்கிறது.

செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழுவுடனும், சிவில் நிர்வாக அதிகாரி வேணுரத்னாயக்காவுடனும் அக்குழுவினர் பேச்சு நடத்தி வருகின்றனர். — என்றார்.

(உ-8)

பாடசாலை உதைபந்தாட்டப்போட்டிகள்

யாழ்ப்பாணம், அக். 14

யாழ். மாவட்டப் பாடசாலைகள் உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியின் மாவட்ட மட்டப் போட்டிகள் இன்று மாலை ஆரம்பமாகின்றன.

17 வயதுப் பிரிவு

17 வயதுப் பிரிவில் இன்று நடைபெறும் ஆட்டங்கள் வருமாறு:-

★ மட்டுவில் சந்திரபுர எதிர் புங்குடுதீவு ம. வி. — இந்த ஆட்டம் மட்டுவில் சந்திரபுர ஸ்கந்தவரோதயா மைதானத்தில் நடைபெறும்.

யாழ். இந்து மைதானத்தில் நடைபெறும் ஆட்டங்களில் நாவாந்துறை றோ. க. பாடசாலையை எதிர்த்து உரும்பராய் இந்துவும், புனித சார்ள்ஸ் கல்லூரியை எதிர்த்து அருணோதயாவும் மோதும்.

நெல்லியடி ம. .ம. வி. மைதானத்தில் நடைபெறும் ஆட்டங்களில் அச்சுவேலி ம. வி.யை எதிர்த்து கரவெட்டி விக்னேஸ்வராவும், சாவகச்சேரி இந்துவை எதிர்த்து ஹாட்லி கல்லூரியும் மோதும்.

19 வயதுப் பிரிவு

19 வயதுப் பிரிவில் இன்று பிற்பகல் 4 மணிக்கு வரணி ம. வி.யை எதிர்த்து புங்குடுதீவு ம. வி. மோதும். இந்த ஆட்டம் மட்டுவில் சந்திரபுர ஸ்கந்தவரோதயா மைதானத்தில் நடைபெறும். [உ]

12 பேர் மரணம்

மணிலா, அக். 14

இந்தியாவின் அஸாம் மாநிலத்தில் ஷிங்றி என்ற ஊருக்குள் பசி கொண்ட காட்டு யானைகள் புகுந்து அட்டகாசம் நிகழ்த்தியதில், 12 பேர் மிதியுண்டு உயிரிழந்தனர்.

கடை ஒன்றையும் இந்த யானைகள் துவம்சம் செய்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

ஊர்காவலர்கள் தீப்பந்தங்களைக் காட்டி யானைகளை மீண்டும் காட்டுக்குள் துரத்தினர். [உ-10]

மரண அறிவித்தல்கள்

அருட் சகோதரி

மேரி யோசேப்பின் அமிர்தநாதர்

திருக்குடும்ப சபையைச் சேர்ந்தவரும் மாதகலைப் பிறப்பிடமாகக் கொண்டவருமான அருட் சகோதரி மேரி யோசேப்பின் அமிர்தநாதர் அவர்கள் 13-10-1992 அன்று இறைபதம் அடைந்துவிட்டார். இறுதித் திருப்பலியும் சடங்குகளும் 14 ஆம் திகதி பி. ப. 3.30 மணிக்கு யாழ்ப்பாணம் திருக்குடும்பக் கன்னியர் மடத்து சிற்றாலயத்தில் இடம்பெறும்.

மாகாண இல்லம்
யாழ்ப்பாணம்.

[22889]

வை. தாமோதரம்பிள்ளை

(இளைப்பாறிய கட்டட ஓவசியர்)

வை. தாமோதரம்பிள்ளை 08-10-92 சனிக்கிழமை கிளிநொச்சியில் காலமானார்.

இவர் காலஞ்சென்ற கனகம்மாவின் அன்புக் கணவரும், மகேஸ்வரன், குலமணி பத்மநாதன் [ஜேர்மனி], பாலேந்திரன் [மின்சாரசபை, கிளிநொச்சி], வாலாம்பிகை, சுகிர்தமலர், காலஞ்சென்ற அமிர்தலிங்கம், விக்கினேஸ்வரி, காலஞ்சென்ற ஞானமூர்த்தி, ஆகியோரின் அன்புத் தந்தையும், பரிமளம் வேணுகோபால் [உப்புக் கூட்டுஸ்தாபனம், ஆனையிறவு], கனகலக்ஷ்மி, மகேஸ்வரி, மாணிக்கராசா [டென்மார்க்], சண்முகானந்தன், பஞ்சலிங்கம் ஆகியோரின் அன்பு மாமனாருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் கிளிநொச்சியில் நடைபெற்றன. இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்கிறோம்.

தகவல்:
இ. சண்முகானந்தன்
(மருமகன்)

(22893)

A. C. முத்துராஜா

(இளைப்பாறிய கூட்டுறவுப் பரிசோதகர்)

A. C. முத்துராஜா காலமானார். இவர் காலஞ்சென்ற கோப்பாய் சின்னப்பா தம்பதிகளின் புதல்வனும், திருமதி அழகம்மாவின் அருமைக் கணவரும், சித்திரா ([illegible] தருமபுரம்), தாசன் (U. K), சுரேந்திரா, சுமித்திரா, மாலினி ஆகியோரின் அன்புத் தந்தையாரும், குலசேகரராஜா (கல்வித் திணைக்களம் கிளிநொச்சி), விஜிதா (U. K), சொர்ணலிங்கம் (Accountant), சாந்தகுமார் (இத்தாலி), தேவகுணநேசன் (C. B. A), ஆகியோரின் அன்பு மாமனாரும்; A C. செல்வராசா, திருமதி திரேஸ் சற்குணசிங்கம், திருமதி மேர்ஸி இராஜநாயகம், திருமதி றோஸி தம்பிஐயா, காலஞ்சென்றவர்களான Rev A. C. துரைராசா, A C. ஜெயராசா A. C. கனகராசா, ஆகியோரின் பிரிய சகோதரரும் காலஞ்சென்ற D. இராஜநாயகத்தின் மைத்துனருமாவார்.

நல்லடக்க ஆராதனை இன்றுமாலை 2.30 மணிக்கு இடம்பெறும்.

தகவல்:
திருமதி சுமித்திரா சாந்தகுமார்

[22888]

திருமதி விசுவலிங்கம் தங்கராசம்

இணுவில் மேற்கைச் சேர்ந்த திருமதி விசுவலிங்கம் தங்கராசம் அவர்கள் இறைபதம் எய்தினார்.

இவர் காலஞ்சென்ற க. விசுவலிங்கத்தின் அன்பு மனைவியும், வடிவாம்பிகை, பரஞ்சோதி [ஆசிரியர், இணுவில் மத்திய கல்லூரி], தனலட்சுமி ஆகியோரின் அன்புத் தாயாரும், காலஞ்சென்ற செல்வரத்தினம், செங்கமலம், நல்லையா [முகாமையாளர், சுன்னாகம் ப. நோ. கூ. ச.] ஆகியோரின் அன்பு மாமியாரும், சதீஸ்குமார், கவிதா, வனிதா, திருக்குமரன், சுகந்தா, ஜெயந்தா, ஜனார்த்தனி, யசோதினி, றோஜினி, ரமேஷ்கண்ணா ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் 14-10-92 [இன்று] பகல் 12 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக காரைக்கால் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
வி. பரஞ்சோதி
[ஆசிரியர்]

சோதி வாசம்,
இணுவில் மேற்கு.

[22887]

பரீட்சை முடிவுகள்

யாழ்ப்பாணம், அக். 14

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தினால் இவ்வருடம் ஜூலை மாதம் நடத்தப்பட்ட மருத்துவமாணி மூன்றாம் ஆண்டு (பகுதி I) பரீட்சையில் 36 மாணவர்கள் சித்தி அடைந்துள்ளனர்.

பல்கலைக்கழகப் பரீட்சைப் பிரிவு இந்த முடிவுகளை அண்மையில் வெளியிட்டிருந்தது.

மாவீரர் குறிப்பேடு

யாழ்ப்பாணம், அக்.14

சென்ற வருட மாவீரர் பட்டியலில் திருத்தங்கள் ஏதும் செய்ய வேண்டியிருப்பின், சம்பந்தப்பட்டவர்கள், கொக்குவிலில் உள்ள "தமிழீழ மாவீரர் பணிமனை" யுடன் உடனடியாகத் தொடர்பு கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளனர். [ஒ]

சு. க. செயற்குழுவில் சந்திரிகா

கொழும்பு, அக் 14

சுதந்திரக் கட்சிச் செயற்குழுவின் உறுப்பினர்களில் ஒருவராக திருமதி சந்திரிகா குமாரணதுங்க நியமிக்கப்பட்டிருக்கின்றார் என்று தெரிவிக்கப்படுகிறது. [ஒ-எ]

அராலியில் இலவச திருமணப் பதிவு

அராலி, அக்.14

அராலி மேற்கு புங்கங்குளி நல்லொளி சனசமூக நிலைய எல்லைக்கு உட்பட்ட 23 தம்பதிகளுக்கு கடந்த ஞாயிற்றுக்கிழமை அராலி மேற்கு வள்ளியம்மை ஞானகார்த்த வித்தியாசாலை மண்டபத்தில், இலவச திருமணப் பதிவு செய்து வைக்கப்பட்டது.

இதேசமயம் அராலி மேற்கு முத்தமிழ் சனசமூக நிலையத்தில் எதிர்வரும் 18 ஆம் திகதி முப்பத்தைந்து தம்பதிகளுக்கு இலவச திருமணப் பதிவு செய்து வைக்கப்படவுள்ளது. [ஒ-12]

சனசமூக நிலையங்களில் குழாய்க் கிணறுகள்

அராலி, அக்: 14

வலி-மேற்கு பிரதேசசபைக்குட்பட்ட ஏழு சனசமூக நிலையங்களில் மக்கள் குடிதண்ணீர் பெறுவதற்கு வசதியாக குழாய்க் கிணறுகள் அமைக்கப்படவுள்ளன.

சங்கானை பாரதி சனசமூக நிலையத்திலும், அராலிமேற்கு நல்லொளி சனசமூக நிலையத்திலும் கிணறுகள் அமைக்கப்பட்டு வருகின்றன.

தொடர்ந்து மற்றைய சனசமூக நிலையங்களிலும் குழாய்க் கிணறுகள் அமைக்கப்படவுள்ளன. [ஒ-13]

படையினர்...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

அவர்களில் ஒருவரின் சடலம் மட்டுமே உறவினர்களினால் அடையாளம் காணப்பட்டது.

அச்சடலம் அடுத்த நாள் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. இறுதிக் கிரியை நடத்தவும் அனுமதி வழங்கப்பட்டது.

ஏனைய நான்கு பேரினதும் சடலங்களை அங்குள்ள பாழுங்கிணற்றில் படையினர் தூக்கி வீசினர்.

தாங்கள் ஓட வேண்டாம் என்று கூறியபோதும் அதையும் மீறி ஓடியதற்காகவே இந்த ஐவரையும் சுட வேண்டிய நிலை தமக்கு ஏற்பட்டதாக படையினர் அங்குள்ள மக்களிடம் பின்னர் தெரிவித்தனர்.

இதேவேளை —

அளவெட்டிப் பகுதியில் படையினரிடம் சிக்கிய மக்களில் ஐந்து இளைஞர்களை அவர்களது கைகளையும் கால்களையும் கட்டி படையினர் துன்புறுத்தினர்.

அவர்களின் கை, கால்களில் ஏற்பட்ட காயங்கள் ஆறுவதற்கு மூன்று வாரங்கள் சென்றன.

இப்போது இந்த இளைஞர்களை இளவாலைப் பகுதியில் தமது வேலைகளைச் செய்வதற்கு படையினர் பயன்படுத்தி வருகின்றனர்; தொடர்ந்து அவர்கள் துன்புறுத்தப்படுகின்றனர்.

— இவ்வாறு தப்பி வந்தவர் [illegible] [உ-13]

பாடசாலைகளில்

வெள்ளிக்கிழமையை விடுமுறையாக்க வற்புறுத்தும் ஆலோசனைக் கூட்டம்

கொழும்புத்துறை, அக். 14

இந்துசமய மாணவர்கள் பெரும்பான்மையாக உள்ள பாடசாலைகளில் வெள்ளிக்கிழமையை வாராந்த விடுமுறை நாளாக்க வேண்டும் என்ற நிலைப்பாட்டை வற்புறுத்தி, நடைமுறைப்படுத்த நடவடிக்கை எடுப்பது சம்பந்தமாக ஆராயப்பட உள்ளது.

கல்விப் பகுதியுடன் தொடர்பு கொண்டு இது சம்பந்தமான நடைமுறைச் சாத்தியங்களை ஆராய்வதற்கும் உத்தேசிக்கப்பட்டுள்ளது.

இது பற்றி பரந்த அளவில் ஆராய்வதற்கான விசேட கூட்டம் ஒன்று யாழ் மாவட்ட இந்து இளைஞர் பேரவையின் சார்பில் இன்று பி.ப. 4 மணிக்கு நல்லை ஆதீனத்தில் நடைபெறவுள்ளது.

இந்து சமய நிறுவனங்கள் பலவற்றின் பிரதிநிதிகளும் கலந்து கொள்ளும் இக் கூட்டத்தில் எதிர்வரும் ஸ்கந்தஷஷ்டி விரதத்தை உயிர் பாதுகாப்பு வாரமாக அனுஷ்டிப்பது குறித்தும் இக் கூட்டத்தில் ஆராயப்படும். [அ-30]

அன்பளிப்பு

அரியாலை, அக். 14

கொழும்புத்துறை மேற்கு இந்து இளைஞர் மன்றத்தின் அனுசரணையுடன் திரு. கு. நவாஸ் என்பவர் கொழும்புத்துறை மேற்கு வதுளிபிட்டி விநாயகர் ஆலயத்தின் கிணற்றுக்கு அருகில் குழாய்க் கிணறு ஒன்றை அமைத்துக் கொடுத்துள்ளார். [ஒ-17]

புத்தாடைகள் அன்பளிப்பு

யாழ்ப்பாணம், அக். 14

1990 ஆம் ஆண்டு இராணுவ நடவடிக்கைகளினால் பாதிக்கப்பட்டு றெட்பானா அமைப்பினால் சிறுப்பிட்டியில் அமைத்துக் கொடுக்கப்பட்ட குடிசைகளில் தற்போது தங்கியுள்ள 50 வறிய குடும்பங்களுக்கு அச்சுவேலி கலைமகள் சனசமூக நிலையம் புத்தாடைகளை அன்பளிப்பாக வழங்கியுள்ளது. [த-ம]

கடலில் கொட்டப்பட்ட...

(1 ஆம் பக்கத்தொடர்ச்சி)

ஆனால் அவை அத்தனையும் பொய்கள் என்றும்—

ஸ்ரீலங்கா அரசே கொட்டப்படும் ஆயுதங்களை உத்தியோகப்பற்றற்ற முறையில் இரகசியமாக வாங்கியது என்றும் இப்போது தெரியவந்துள்ளதாம்.

இரகசியமாக வாங்கப்பட்ட ஆயுதங்கள் வடக்கு - கிழக்கு யுத்தத்தில் பாவிக்கப்பட்டன; பாவிக்கப்படுகின்றன என்றும்—

பாவிக்க முடியாத பழுதடைந்தவையும், காலத்துக்கு ஒவ்வாதவையுமே கடலில் கொட்டப்பட்டு வருவதாகவும் — மேலும் தெரிவிக்கப்படுகிறது.

இந்த ஆயுத விவகாரம் பற்றிய மேலதிக தகவல்கள் வருமாறு:-

மேற்கு நாடுகள் விதித்த ஆயுதத் தடையைத் தந்திரமாக உடைத்தெறிந்து, சர்வதேச ஆயுத விற்பனையாளர் ஒருவருடன் ஸ்ரீலங்கா அரசு இரகசியமாகச் செய்து கொண்ட உடன்படிக்கை ஒன்றின் கீழ் இந்த ஆயுதங்களும் வெடிப் பொருள்களும் வாங்கப்பட்டன.

1980 நடுப்பகுதியில் வடக்கு — கிழக்கில் தமிழ்ப் போராளிகளின் நடவடிக்கைகள் ஆரம்பமானதைத் தொடர்ந்து ஸ்ரீலங்கா அரசு ஆயுதங்களை வாங்கத் தொடங்கியது.

மேற்கு நாடுகள் ஸ்ரீலங்காவுக்கு ஆயுத விற்பனை செய்வதற்கு தடை விதித்ததைத் தொடர்ந்து ஸ்ரீலங்கா இராணுவம் தனிப்பட்ட முறையில் தனிநபர்களுடன் தொடர்புகொண்டு ஆயுதங்களை வாங்கத் தொடங்கியது.

அவ்வாறு ஆயுதங்களை இலங்கைக்கு விற்பனை செய்த பெல்ஜியத்தைத் தலைமையகமாகக் கொண்ட ஸ்பானிஷ் நிறுவனம் ஒன்று அனுப்பிய ஆயுதங்களே காலியில் சேமித்து வைக்கப்பட்டிருந்தன.

இந்த ஆயுதங்கள் காலித் துறைமுகத்தில் களஞ்சியப்படுத்தி வைக்கப்பட்டிருந்தபோது அவை ஜே.வி.பியின் கைக்குப் போய்விடக்கூடாது என்பதில் பாதுகாப்புப் படை மிகவும் அவதானமாக இருந்தது.

அதிகூடிய வெடிப் பொருள்கள் — 50,000, டாங்கி எதிர்ப்பு ரைபிள்களுக்குரிய கிரனேட்டுகள், 50,000 க்கு மேற்பட்ட வெடிக்கும் பியூசுகள், 81 மி. மி. மோட்டார் ரவைகள் — 4,000, மற்றும் 50,000 டாங்கி எதிர்ப்புக் கண்ணிகள், ஏவுகணை உயர் வெடிப் பொருள்கள்—88,000, வழமையாக பாவிக்கப்படாத ஏராளமான கலிபர்கள் ஆகியனவும் களஞ்சியப்படுத்தப்பட்டிருந்த ஆயுதங்களில் சிலவாகும்.

25 இறாத்தல் ஷெல்கள் பியூஸ்கள் என்பன சிங்கப்பூருக்கும் பாகிஸ்தானுக்கும் விற்கப்பட்டன; [illegible] அயல் நாடு ஒன்றுக்கு இரகசியமாகவும் பல ஆயுதங்கள் விற்கப்பட்டன.

ஸ்பெயின் முகவருக்கும் அரசுக்கும் இடையிலான ஒப்பந்தம் 1987 மார்ச் மாதத்தில் காலாவதியானது. [அ-எ]

இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி

புவியில்
உதயம்:
06
—
09
—
1955



ஆழியில்
அஸ்தமனம்:
14
—
10
—
1990

இம்மனுவல் ரவி

சிங்களத்துப் படைகளினால் [சிதறடிக்கப் படகினிலே
நீ செங்குருதி சிந்திவிட்டாய் - இந்த நிலை
கண்டு உங்கள் மனைவி]- மக்கள் ஏங்குகின்றார்
ஈரண்டாய் இடையில் நின்று - உன்
அன்புருவம் சிதைந்துவிட்ட ஆழிதன்னை
அனுதினமும்] நாம் பார்த்து அழுகின்றோமே!

[அன்னாரின் ஆன்ம சாந்திக்காக இன்று 14-10-92 இல் அருள் ஆச்சிரம ஆலயத்தில் காலை 6 மணிக்கு திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும்;

அவரின் ஆன்ம சாந்திக்காக வேண்டும்;

மனைவி, மக்கள்,
பெற்றோர், உறவினர்.

[22876]

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட்டினரால் யாழ்ப்பாணம் நாவலர் [illegible] இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 14-10-92 இல் [illegible] வெளியிடப்பெற்றது.